# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:120** **தேதி:-22.07.2016**

***மத்திய செயற்குழு முடிவுகள் மற்றும் நிர்வாகத்துடன் சந்திப்பு***

அன்புள்ள தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு ஜூலை 18 முதல் 20 வரை பெரும் உற்சாகத்துடன் புதுடெல்லியில் நடைபெற்றது. இந்த மத்திய செயற்குழுவிற்கு அகில இந்திய தலைவர் தோழர் பல்பீர்சிங் தலமை தாங்கினார்.

இந்த மத்திய செயற்குழுவிற்கு வந்திருந்த அனைவரையும் BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு வரவேற்றார். CITU சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் A.K.பத்மநாபன் இந்த மத்திய செயற்குழுவை துவக்கி வைத்து உரையாற்றினார். இவர் தனது துவக்க உரையில், BSNL ஊழியர் சங்கம் பெற்றிருக்கும் இந்த தொடர் ஆறாவது வெற்றியினை வாழ்த்தியதுடன், இந்த வெற்றி மத்திய அரசுகளின் தவறான பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக நாம் நடத்திய போராட்டங்களின் காரணமாக கிடைத்த வெற்றி என்றும் குறிப்பிட்டார். மத்திய அரசு கடைபிடித்து வரும் தவறான பொருளாதார கொள்கைக்கு எதிராக நடைபெற உள்ள 2016,செப்டம்பர் 2 பொது வேலை நிறுத்தத்தினை BSNLல் உள்ள அனைத்து பகுதி ஊழியர்களையும் திரட்டி வெற்றிகரமாக்கிட BSNL ஊழியர் சங்கம் பாடுபட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இவரது துவக்க உரைக்கு பின் BSNL MS சங்கத்தின் பொது செயலாளர் தோழர் சுரேஷ் குமார் மற்றும் SNATTA சங்கத்தின் பொது செயலாளர் தோழர் அனூப் முகர்ஜி ஆகியோர் வாழ்த்தி பேசினார்கள்.

BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 7ஆவது உறுப்பினர் சரிபார்ப்பு தொடர்பான ஆய்வு செப்டம்பர் 2 பொது வேலை நிறுத்தம் மற்றும் இன்று நம் முன் உள்ள கடமைகள் தொடர்பான ஆய்படு பொருட்களை சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார். அவரது அறிமுக உரைக்கு பின்னர் நடைபெற்ற விவாதத்தில் அனைத்து மாநில செயலாளர்களும், மத்திய சங்க நிர்வாகிகளும், சுமார் 16 மணி நேரம் பங்கேற்றனர். இடையில் BSNL ஊழியர் சங்கத்தின் புரவலர் தோழர் V.A.N.நம்பூதிரி அவர்கள் தனது ஆலோசனைகளை முன்வைத்து மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கு வழிகாட்டினார். மூன்று நாட்கள், மிக சீரிய முறையினில் மத்திய செயற்குழு உறுப்பினர்களின் நீண்ட நெடிய ஜனநாயகபூர்வமான விவாதங்களுக்கு பின்னர் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் 20.06.2016 அன்று மாலை தொகுப்புரை வழங்கினார்.

உற்சாகத்துடன் நடைபெற்ற இந்த மத்திய செயற்குழுவில் செப்டம்பர் 2 பொது வேலை நிறுத்தம், 01.01.2017 முதல் நடைபெற உள்ள ஊதிய மாற்றம், ஊழியர்களின் நீண்ட நாள் தேங்கி உள்ள பிரச்சனைகள், மத நல்லிணக்கம், BSNLன் புத்தாக்கம், BSNL மற்றும் MTNL ஆகியவற்றின் பங்குகளை கேந்திர பங்குதாரருக்கு விற்கும் நிதி ஆயோக்கின் பரிந்துரைகள்

மற்றும் ஓய்வூதியர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு மற்றும் BSNL ஊழியர்களுக்கு அரசு ஓய்வூதியம் வழங்குவதற்கு இருந்த 60% என்கின்ற உச்சவரம்பு நீக்கப்பட்டது ஆகிவற்றில் கிடைத்துள்ள வெற்றி ஆகியவை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**தேங்கியுள்ள பிரச்சனைகள் தீர்விற்கான போராட்டங்கள்:-** ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணக்கோரி கீழ்கண்ட இயக்கங்களை நடத்துவது என மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது:

1) **சிவப்பு ரிப்பனுடன் கூடிய கோரிக்கை அட்டை அணிந்து ஆர்ப்பாட்டம் : 17.08.2016**
2) **தர்ணா : 08.09.2016**
3) **மாவட்ட மாநில அகில இந்திய மட்டங்களில் உண்ணாவிரதம் : 20.09.2016**
4) **பிரச்சனைகள் தீராவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வது. அதனை மத்திய செயலகம் முடிவு செய்யும்.**

**27.07.2016 அன்று வெற்றி விழா:-** அரசு ஓய்வூதியம் வழங்குவதில் இருந்த 60% உச்சவரம்பு நீக்கப்பட்டது மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 78.2% IDA இணைப்பு ஆகிய நமது கோரிக்கைகள் வெற்றி பெற்றுள்ளதை மத்திய செயற்குழு பாராட்டியது. இது அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் நடத்திய 2015, ஏப்ரல் 21 மற்றும் 22 தேதிகளில் நடைபெற்ற ஒன்று பட்ட போராட்டத்திற்கு கிடைத்திட்ட வெற்றி என்பதை மத்திய செயற்குழு பதிவு செய்துள்ளது. இந்த வேலை நிறுத்தத்திற்கு பின் 01.05.2015 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் தான் 60% உச்சவரம்பு மற்றும் 78.2% IDA இணைப்பு ஆகிய பிரச்சனைகள் தொடர்பாக அமைச்சரவைக் குறிப்பு ஒன்றை தாக்கல் செய்வதாக அரசின் சார்பாக பங்கெடுத்த DOT செயலாளர் உறுதி அளித்தார். இந்த ஒப்பந்தத்தின் காரணமாகவே 05.07.2016 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் இரண்டு பிரச்சனைகள் தொடர்பாக முடிவு செய்துள்ளது. இந்த வெற்றியை கொண்டாடும் வகையில் நாடு முழுவதும் 27.07.2016 அன்று சிறப்புக் கூட்டங்கள் மூலம் ஊழியர்களிடையே விளக்கி கூறி இனிப்பு வழங்கி கொண்டாட வேண்டும் என மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது. இந்த நிகழ்ச்சியை மாநில மாவட்ட சங்கங்கள் சிறப்பாக கொண்டாடி அதன் புகைப்படங்களை மாநில மத்திய சங்கங்களுக்கு அனுப்பிட வேண்டும்.

**செப்டம்பர் 2 வேலை நிறுத்தம் தொடர்பாக சிறப்புக் கருத்தரங்கங்கள்:-** செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை BSNLல் வெற்றிகரமாக்கிட சக்தி வாய்ந்த பிரச்சாரத்தை ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது. இந்த வேலை நிறுத்தத்தின் 12 அம்ச கோரிக்கைகளை பிரபலமாக்கும் வகையில் அனைத்து மாவட்டம்/மாநிலங்களிலும் சிறப்பு கருத்தரங்கங்களை வெற்றிகரமாக நடத்திட வேண்டும்

**BSNL மற்றும் MTNLல் கேந்திர பங்குவிற்பனை என்கிற நிதி ஆயோக்கின் முன்மொழிவிற்கு மத்திய செயற்குழு கண்டனம்:-** 20.07.2016 அன்று வெளியான இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கையில் BSNL மற்றும் MTNLல் கேந்திர பங்குவிற்பனை தொடர்பாக நிதி ஆயோக் ஆலோசித்து வருவதாக செய்தி வெளியாகி உள்ளது. விரைவில் இந்த முடிவினை அமுலாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள மத்திய அமைச்சரவைக்கு பரிந்துரைக்கப்படும் என்று அந்த செய்தி சொல்கிறது. கேந்திர பங்கு விற்பனை என்றால் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணிசமான பங்குகள் விற்கப்பட்டு அந்த நிறுவனத்தை BSNLன் கேந்திர பங்குதாரராக மாற்றுவது என்று பொருள். அதன் பின்னர் அந்த தனியார் நிறுவனம் நிர்வாகத்தில் பங்கு கொள்ளும். இது ஒரு ஆபத்தான முடிவு. நிதி ஆயோக்கின் இந்த முடிவை கடுமையாக கண்டித்த மத்திய செயற்குழு, இதர

சங்கங்களுடன் ஆலோசித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மத்திய சங்கம் மேற்கொள்ள வேண்டும் என முடிவு செய்துள்ளது.

**நிர்வாகத்துடன் சந்திப்பு:-** 21.07.2016 அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோர் திரு A.M. குப்தா GM(Restg) அவர்களை சந்தித்து, பண்டிகைக் காலம் நெருங்குவதால், புதிய PLI ஃபார்முலா உருவாக்கப்பட வேண்டும். எனவே அதற்கான கமிட்டியை உடனடியாக கூட்ட வேண்டும் என கேட்டுக் கொண்டதோடு, புதிய ஃபார்முலா உருவாக்கப்படவில்லை என்றால் அதற்கு பின் ஏற்படும் விளைவுகளுக்கு தொழிற்சங்கங்களை பொறுப்பாக்கக் கூடாது என்றும் தெரிவித்தனர். மேலும் திரு D.சக்கரவர்த்தி GM(Pers) அவர்களை சந்தித்து SC/ST ஊழியர்களுக்கு சங்கம் சேரும் உரிமையை மறுக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து BSNL ஊழியர் சங்கம் கொடுத்துள்ள புகாரின் மீது உடனடி நடவடிக்கை தேவை என்பதை வலியுறுத்தினர். கார்ப்பரேட் அலுவலகத்தின் SCT பிரிவு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் SEWA BSNLல் உள்ள SC/ST ஊழியர்கள் வேறு எந்த தொழிற்சங்கத்திலும் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் மட்டுமே கோரிக்கை வைத்துள்ளது. SEWA BSNL என்பது ஒரு சமூக நல அமைப்பு. அதில் உறுப்பினர்களாக உள்ள SC/ST ஊழியர்களின் சங்கம் சேரும் உரிமையை மறுக்க முடியாது என்பதே BSNL ஊழியர் சங்கத்தின் நிலைபாடு. இதில் தலையிட்டு விரைவில் தீர்வு காண்பதாக GM(Pers) உறுதி அளித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,



**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**